**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# விஐடியில் நவீன ஆய்வகம் நிறுவிய சாம்சங் ஆராய்ச்சி நிறுவனம்

**வேலூர், நவ. 29:** சாம்சங் ஆராய்ச்சி நிறுவனம் (இந்தியா) தனது புதிய மற்றும் நவீன ஆய்வகத்தை வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில் நிறுவியுள்ளது. இந்த புதிய ஆய்வகத்தை விஐடி வேந்தர் கோ.விசுவநாதன் திறந்து வைத்தார்.

சுமார் 4,000 சதுர அடியில் பல்வேறு, நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டுள்ள இந்த ஆய்வகம் மூலம் பி.டெக். 3-ஆம் ஆண்டு, 4-ஆம் ஆண்டு மாணவ, மாணவிகள், எம்.டெக். மாணவ, மாணவிகள், ஆராய்ச்சி படிப்பை மேற்கொள்ளும் மாணவர்கள் சாம்சங் ஆராய்ச்சி நிறுவன பொறியாளர்களுடன் இணைந்து ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியிடுவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, இந்த ஆய்வகங்கள் மூலம் பேராசிரியர்கள், மாணவர்கள் செயற்கை நுண்ணறிவு, இயந்திர வழி கற்றல், தரவு பொறியியல் துறையில் அடுத்தக் கட்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்ளலாம்.

ஆய்வகத்தில் மாணவர்கள், பேராசிரியர்கள் இணைந்து ஆராய்ச்சிகளை மேற்கொள்ளலாம்.

வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களான மொபைல் தொழில்நுட்பம், பேச்சு, உரை அங்கீகாரம் இவர்களுடன் சாம்சங் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூத்த வல்லுநர்களும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வார்கள் என்று சாம்சங் ஆராய்ச்சி நிறுவனம் -இந்தியா (பெங்களூரு ) தலைமை தொழில்நுட்ப அதிகாரி மோகன் ராவ் கோலி தெரிவித்தார்.



வேலூர் விஐடி பல்கலைக்கழகத்தில் சாம்சங் ஆராய்ச்சி நிறுவனத்தின் (இந்தியா) புதிய ஆய்வகத்தைத் திறந்து வைத்து ஆலோசனை நடத்திய விஐடி வேந்தர் கோ.விசுவநாதன். உடன் சாம்சங் ஆராய்ச்சி நிறுவனம் –இந்தியா (பெங்களூரு ) தலைமை தொழில்நுட்ப அதிகாரி மோகன் ராவ் கோலி, விஐடி துணைத் தலைவர் சங்கர் விசுவநாதன் உள்ளிட்டோர்.

அவர் மேலும் கூறுகையில், விஐடியில் தொடங்கப்பட்டுள்ள இந்த ஆய்வகம் பல புதிய கண்டுபிடிப்புகளை கண்டுபிடிக்கவும், நுகர்வோர்களின் பல்வேறு தேவைகளை நிறைவு செய்யவும் பல்வேறு தொழில்நுட்ப ஆராய்ச்சி மேற்கொள்வதற்கும் உதவியாக இருக்கும்.

இன்றைய உலகம் பல்வேறு தரவுகளை மையமாக கொண்டும், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்து நம் வாழ்வின் பல்வேறு பரிமாற்றங்களைக் கொண்டு வருகிறது. விஐடி மாணவர்கள், பேராசிரியர்கள் சாம்சங் ஆராய்ச்சி பொறியாளர்களுடன் இணைந்து பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு உலகின் பல்வேறு பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையில் இந்த ஆராய்ச்சி மையம் உருவாக்கப்பட்டுள்ளது என்றார்.

திறப்பு விழாவில் விஐடி துணைத் தலைவர் சங்கர் விசுவநாதன், சாம்சங் ஆராய்ச்சி நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

# ரூ. 5,566 கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்

**சென்னை, நவ. 29:** தொழில் முதலீடுகள் மாநாட்டில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் முன்னிலையில் ரூ. 5, 566.92 கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் புதன்கிழமை கையொப்பமாகின.

2024 -ஆம் ஜனவரி மாதத்தில் சென்னையில் நடைபெற உள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு முன்னோடியாக சென்னை மாவட்ட தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு ஆலந்தூரில் புதன்கிழமை நடைபெற்றது. இதில் அமைச்சர் பேசியது:



சென்னை ஆலந்தூரில் புதன்கிழமை நடைபெற்ற சென்னை மாவட்ட தொழில் முதலீடுகள் மாநாட்டில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் ரூ.5,566.92 கோடியில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள். உடன், நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், துறை செயலர் அர்ச்சனா பட்நாயக் உள்ளிட்டோர்.

கடந்த 2 ஆண்டுகளில், தொழில் துறையில் வெளிநாடு மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து, 241 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூ.2. 97 லட்சம் கோடி முதலீடுகளை ஈர்த்து, 4.15 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.

இதுவரை ரூ. 1,226 கோடி மானியத்துடன் ரூ. 4,146.59 கோடி வங்கி கடனுதவி வழங்கப்பட்டு 1,065 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உள்பட 32,046 பேர் புதிய தொழில் முனைவோர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன தொழில்களின் வளர்ச்சிக்காக 325.64 ஏக்கர் பரப்பளவில் 8 புதிய தொழிற்பேட்டைகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

கிண்டி, அம்பத்தூர், சேலம் ஆகிய இடங்களில், ரூ.175.18 கோடி மதிப்பில் 264 தொழில் கூடங்கள் கொண்ட புதிய அடுக்குமாடி தொழில் வளாகங்கள் விரைவில் முதல்வர் மு.க.ஸ்டாலினால் திறந்து வைக்கப்பட உள்ளன.

தமிழக அரசின் முன் மாதிரியான திட்டங்களால், 'ஸ்டார்ட் - அப்' தர வரிசையில் இந்திய அளவில் தமிழகம் 3-ஆம் இடத்தில் உள்ளது. புத்தாக்க சிந்தனைக் கொண்ட இளைஞர்களையும், மாணவர்களையும் ஊக்கப்படுத்தும் வகையில் 8.98 லட்சம் பேருக்கு தொழில் முனைவோர் பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தை தொழில் துறையில் முதன்மை மாநிலமாக கொண்டு வர அனைவரும் பாடுபட வேண்டும் என்றார் அவர்.

இந்த மாநாட்டில் சென்னையில் வாகன உதிரி பாகங்கள் தயாரிப்பு, விண்வெளி மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள், தகவல் தொழிலநுட்ப சாதனங்கள் உள்ளிட்ட பல்வேறு தொழில்கள் தொடங்குவதற்காக அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் ரூ.5,566.92 கோடி முதலீட்டிற்கான 293 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

மேலும், மக்கள் நல்வாழ்த் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ரூ.1.10 கோடி மதிப்பிலான மானியங்களை தொழில்முனைவோர்களுக்கு வழங்கினார்.

நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன், சென்னை மாவட்ட ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன துறை, அரசு செயலர் அர்ச்சனா பட்நாயக் உள்பட அரசு அதிகாரிகள், தொழில் முதலீட்டாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# சமூகநீதியின் முன்னோடி பாரதி!


டி.எஸ். தியாகராசன்

மகாகவி பாரதி தனது 26-ஆவது வயதில் 1908 செப்டம்பர் முற்பகுதியில் ஆங்கிலேயர்களின் கண்களில் இருந்து தப்புவதற்காக புதுச்சேரி சென்றவர். பத்திரிகைத் தொழிலோடு சமூக பிரச்னைகளையும் கையிலெடுத்தார். அப்போது அவரது சொந்த ஜாதியாரே அவரை இத்தகைய நடவடிக்கைகள் காரணமாக ஜாதி பிரஷ்டம் செய்தார்கள் என்பது வரலாறு.

புதுவையில் வசித்தபோது மகான் அரவிந்தரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார் பாரதியார். சுவாமி விவேகானந்தரை நேரில் தரிசிக்கும் நற்பேறு பாரதி பெற்றாரில்லை என்றாலும், அவரது சமூக சீர்திருத்த கொள்கைகள் மீது கொள்ளை பிரியம் கொண்டிருந்தார். சுவாமி விவேகானந்தர் கூறிய, 'ஜாதி ஏற்பாடு வேதாந்த மதத்திற்கு விரோதமானது; ஜாதி என்பது ஒரு வழக்கமே தவிர வேறில்லை. சமயத்துறையில் ஜாதி என்பது கிடையாது. ஆகவே, மதத்தைக் குறை சொல்லி பயனில்லை. மக்களைத் தான் குற்றம் சொல்ல வேண்டும்' என்கிற கூற்றைப் பின்பற்றியவர் பாரதி.

'புதிய இந்தியாவைப் படைப்போம்' என்ற நூலில் சுவாமி விவேகானந்தர் உபதேசித்த 'மன்னுயிரைத் தன்னுயிர் போல் நினைத்து அன்பு செய்யுங்கள். எல்லோரும் பிரம்மம் என்று சொல்லப்படும் அந்த எல்லையற்ற பரம்பொருளின் பல பாகங்களே என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்' என்பதற்கு ஏற்ற விளக்கமாக வாழ்ந்தவர் மகாகவி.

புதுவையில் தீண்டாமை தொடர்பான தனது பணிகளை சுவாமி விவேகானந்தரின் அருள்மொழியோடு இணைத்து நினைவுகூர்ந்து சுதேசமித்திரன் நாளிதழில் 9 ஜூன் 1920-இல் பாரதியார் இப்படி எழுதினார் - 'எந்த ஜாதியாக இருந்தாலும் சரி, அவனை மாம்ஸ பட்சணத்தை நிறுத்தும்படி செய்து அவனுக்கொரு பூணூல் போட்டு, காயத்ரி மந்திரம் கற்பித்து கொடுத்துவிட வேண்டும். பிறகு அவன் பிராமணனாகவே கருதப்பட வேண்டும். இதுதான் விவேகானந்தர் சொல்லிய உபாயம். இது நல்ல உபாயமும் கூட'.

புதுச்சேரியில் பாரதியார் வசித்தபோது அவரோடு நெருக்கமாக இருந்தவர்களில் மகான் அரவிந்தர், வ.வே.சு. ஐயர், குவளைக் கண்ணன், கனகலிங்கம் உள்ளிட்டோர் முக்கியமானவர்கள். அரவிந்தரோ ஞானமார்க்கத்தில் தன்னைத் தோய்த்து கொண்டு வாழ்ந்த ஞானி. வ.வே.சு. ஐயரோ தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, ஹிந்தி, சம்ஸ்கிருதம், லத்தீன், கிரேக்கம், வேதம், உபநிடதம் அனைத்தும் அறிந்த அறிஞர். குவளைக் கண்ணன் என்ற கிருஷ்ணமாச்சாரியோ, பாரதியின் கண்ணன் போன்ற சேவகன். இவர்களில் கனகலிங்கத்தைத் தவிர மற்ற அனைவரும் பிராமணர்கள்; ஆனால் யாரிடத்திலும் ஜாதி அபிமானமோ, துவேஷமோ இருந்ததில்லை.

1917-இல் பாரதியார் 'நியாயம் செலுத்த வேண்டியது நம்முடைய முதற்கடமை' என்றதொரு கட்டுரையை வெளியிட்டார். அதில் 'அவர்களையெல்லாம் ஒன்று திரட்டு. உடனே விபூதி நாமத்தைப் பூசு. பள்ளிக்கூடம் வைத்துக் கொடு. கிணறு வெட்டிக் கொடு. சமத்துவம் கொண்டாடு. நான் நெடுங்காலமாக சொல்லி வருகிறேன் அவர்களையெல்லாம் ஒன்று சேர்த்து ஹிந்து தர்மத்தை நிலைக்கச் செய்யுங்கள். நம்முடைய பலத்தை சிதறவிடாதேயுங்கள்.

மடாதிபதிகளே, நாட்டுக்கோட்டை செட்டிமார்களே, இந்த விஷயத்தில் நீங்கள் பணத்தை வாரி செலவிடுங்கள். இது நல்ல பயன்தரக்கூடிய கைங்கரியம். தெய்வத்தின் கருணைக்குப் பாத்திரமாகும் கைங்கரியம். நமக்கு மண் உழுது, நெல் அறுத்துக் கொடுக்கிற ஜாதியாரை நாம் நேர்மையாய் நடத்த வேண்டாமா' என்று எழுதினார்.

பாரதியைத் தனது குருவாகக் கொண்டாடிய கனகலிங்கம் 'என் குருநாதர்' என்று ஒரு நூல் எழுதியுள்ளார். அதில் மிக முக்கியமான இரண்டு நிகழ்ச்சிகளைப் படிப்பவர் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறார் -

'எனக்கு பாரதியார் வீட்டிற்கு போவதும் அவருடன் காலை சிற்றுண்டி உண்பதும் வழக்கமாகிப் போயின. பாரதியின் வாக்குகளான 'ஏறு போல நட', 'குன்றென நிமிர்ந்து நில்', 'கோல் கை கொண்டு வாழ்' போன்ற கருத்துகள் எனக்கு மந்திரச் சொற்களாயின. இதனால் இவரிடம் உபதேசம் பெற விரும்பினேன்.

ஒரு நாள் நான் அவரை வணங்கிய போது அவர், எனக்கு உபநயனம் செய்து வைக்க இருப்பதாகச் சொன்னார். 'உனக்கு நாளை உபநயனம் செய்ய நிச்சயித்திருக்கிறது. அதிகாலையில் எழுந்து நீராடி சுத்தமான உடையுடன் இங்கு வந்து சேர வேண்டும். சட்டையொன்றும் போட்டுக் கொள்ள வேண்டாம்' என்றார்.

மறுதினம் காலை பாரதியார் வீட்டிற்குச் சென்றேன். உள்ளே போய் நான் பார்க்கையில், அங்கு பாரதியாரின் நண்பர்கள் காணப்பட்டார்கள். அவர்களிடையே அறிஞர் வ.வே.சு. ஐயர் கம்பீரமாக வீற்றிருந்தார். ஸ்ரீநிவாஸாச்சாரியார், நாகசாமி ஐயர், குவளைக்கண்ணன், கோவிந்தராஜுலு நாயுடு முதலானோர் அமர்ந்திருந்தனர். நான் எல்லோரையும் நமஸ்கரித்தேன். எல்லோரும் என்னை உற்றுநோக்கி நமஸ்கரித்து 'வந்தே மாதரம்' சொல்லி வாழ்த்தினார்கள்.

**மகாகவி பாரதியார், 'மடாதிபதிகளே, இந்த விஷயத்தில் நீங்கள் பணத்தை வாரி செலவிடுங்கள். இது தெய்வத்தின் கருணைக்குப் பாத்திரமாகும் கைங்கரியம். நமக்கு மண் உழுது, நெல் அறுத்துக் கொடுக்கிற ஜாதியாரை நாம் நேர்மையாய் நடத்த வேண்டாமா' என்று கேட்டார்.**

பாரதி சுறுசுறுப்பாக கூடத்திற்கும், சமையல்கட்டிற்கும் நடந்த வண்ணம் இருந்தார். 'நாழிகையாகிறது நடக்கட்டும்' என கணீரென்று ஒலித்தது வ.வே.சு. ஐயர் குரல். 'இதோ வந்துவிட்டேன்' என்று எதிரொலித்தது பாரதியாரின் வெண்கல மணிக்குரல். உடனே பாரதியார் பிரசன்னமாகிவிட்டார்.

குங்குமத் திலகமும் நெற்றியுமாக கூடத்தில் லட்சுமி, சரஸ்வதி, கிருஷ்ணன் படங்கள் புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. கிருஷ்ணர் படத்திற்குக் கீழே வளைவான பிச்சுவா கத்தியொன்று இருந்தது. அதற்கும் குங்குமப் பொட்டு வைத்த பாரதியார் சற்று நேரம் தேவி பராசக்தியை தியானித்துப் பாடினார்.

என்னை கிழக்கு முகமாய் உட்காரச் சொன்னார். தனது வீர விழியால் பார்த்து விட்டு குருநாதர் தன் திருக்கரத்தால் என் நெற்றியிலும் புயத்திலும், மார்பிலும் திருநீற்றுக்காப்பு இட்டார். பிறகு என்னை மண்டியிட்டு உட்காரச்சொன்னார். கையில் பூணூலை எடுத்துக்கொண்டு சூரிய வழிபாடு செய்து வெகுநேரம் ஜபம் செய்து முடித்ததும் எனக்கு பூணூலை அணிவித்தார். உடனே நான் சாஷ்டாங்கமாக விழுந்து குருநாதரின் பாதத்தை தொட்டு நமஸ்கரித்தேன்.

குருநாதர் என்னை ஆசிர்வதித்து 'இன்று முதல் நீ பிராமணன்' என்று உரத்த குரலில் கோஷித்தார். 'இனி யாராகிலும் என்ன ஜாதி என்று கேட்டால் நான் பிராமணன் என்று தைரியமாக சொல்லு' என்று கட்டளையிட்டார்.

இந்த நிகழ்ச்சி வெளியில் பரவியது. வெளியே பலரும் தங்களுக்குள் பேசிக்கொண்டார்களே தவிர என் குருநாதரைக் கேட்க யாருக்கும் துணிவு வரவில்லை. இதை அறிந்த என்னுடன் வேலை பார்க்கும் நாகலிங்கம் 'எனக்கும் பாரதியாரிடம் சிபாரிசு செய்து பூணூல் அணிவிக்க ஏற்பாடு செய்யுங்கள்' என்றார்.

நான் அவரை பாரதியாரிடம் அழைத்துச் சென்றேன். அவரது விருப்பத்தையும் சொன்னேன். உடனே பாரதி 'நீ சைவமா, அசைவமா' என்று கேட்டார். பூசாரி 'நான் சைவன்' என்றார். உடனே அவரது தோளில் கைபோட்டு கடற்கரைக் கோவிலுக்குச் சென்று 'தேச முத்துமாரியம்மா' பாடலைப் பாடினார். பிறகு என்னை சந்தித்த நாகலிங்கம், 'எனக்குக் காயத்திரி மந்திரம் உபதேசித்து வேத சடங்குகளை செய்து உபநயனம் செய்துவித்தார்' என்றார்.

நான் நாள் தவறாமல் என் குருநாதர் வீட்டிற்கு போய் வருவதை வழக்கமாக கொண்டிருந்தேன். 1914-ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் உலகயுத்தத்திற்கு கட்டாய ராணுவ சேவை செய்ய புதுவையில் இருந்து ஐந்து பிரெஞ்சு இந்திய வாலிபர்கள் அனுப்பப்பட்டனர். அதில் ஒருவர் என் குருநாதருக்கு பிரெஞ்சு தேசிய கீதங்களைக் கற்றுக்கொடுத்த அந்துவேன் அர்லோக். இந்த இருவருக்கும் குருநாதர் வீட்டில் விருந்து நடைபெற்றது.

செல்லம்மாள் டம்ளரில் தண்ணீர் கொண்டு வைத்து விட்டு, இலை போட்டு அந்த ஐந்து ஹரிஜன வாலிபர்களுக்கும் உணவு பரிமாறினார். என் குருநாதர் எங்கள் அறுவர்க்கும் இடையில் அமர்ந்து சாப்பிட்டார். சாப்பிட்டு முடித்ததும் அந்துவேன் அர்லோக் தான் சாப்பிட்ட இலையைக் கையில் எடுத்தார். உடனே குருநாதர் 'யாரும் இலையைத் தொடவேண்டாம்' என்று சொல்லி 'செல்லம்மா' என்று கூப்பிட்டு இலைகளை எடு என்றார். அம்மையார் எந்தவித வெறுப்பும் இல்லாமல் அப்படியே செய்தார்.'

இப்போது நாம் சிந்திக்க வேண்டும். சுமார் 125 ஆண்டுகட்கு முன்னர் பிராமணர் ஒருவர் ஜாதி வித்தியாசம் பாராமல் பழகிய நாட்டில் இப்போது நடப்பதென்ன? எளிய மக்கள் வாழும் இடங்களில் உள்ள மேல்நிலை குடிநீர்த் தொட்டிகளில் மனிதக் கழிவுகளை கலப்பதும், பள்ளிகளில் தங்கள் சமூகத்தை அடையாளப் படுத்த மாணவர்கள் கைகளில் வண்ணக் கயிறுகளைக் கட்டிக் கொண்டு வருவதும், ஜாதி வெறுப்பினால் ஒருவரையொருவர் தாக்கிக் கொள்வதும் நாளிதழ்கள் வெளியிடும் செய்திகள். இதுபோன்ற இழிசெயல்களில் ஈடுபடுபவர்கள் பிராமணர்கள் அல்ல என்பதை யாரும் குறிப்பிடுவதில்லை.

ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே ஸ்ரீ இராமானுஜர் நந்தனார் குலத்தவரை மேலே உயர்த்தும் பொருட்டு வேதமந்திரங்கள் கற்பித்து திருக்குலத்தார் என பெயரிட்டு வாழ்த்தினார் என்பது கடந்த கால வரலாற்று செய்தி. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் விடுதலை வீரர் சாவர்க்கரும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு பூணூல் அணிவித்து மகிழ்ந்தார் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

பாரதியார் செய்த ஹரிஜன மக்களின் முன்னேற்றப்பணி, இந்தியாவில் காந்தியடிகள் தொடங்கிய ஹரிஜன சேவா பணிக்கு முந்தையது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

கட்டுரையாளர்:
தலைவர்,
திருக்கோவலூர் பண்பாட்டுக் கழகம்.

# பால் உற்பத்தியைப் பெருக்குவோம்

பேரா. தி. ஜெயராஜசேகர்

இந்தியா 2021-22-இல் 22.1 கோடி டன் பாலை உற்பத்தி செய்ததாக ஐ.நா உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு கூறுகிறது. இது உலக பால் உற்பத்தியில் கிட்டத்தட்ட கால் பங்கு ஆகும். அரை நூற்றாண்டுக்கு மேலாக உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தியாளராக செயல்பட்டு வரும் போதிலும், இந்தியாவில் பாலின் விலை அதிகமாக உள்ளது.

இந்திய நுகர்வோர் விவகாரத்துறையின் கூற்றுப்படி, கடந்த இரண்டு ஆண்டுகளில் பாலின் சராசரி சில்லறை விலை 18.08 சதவீதம் அதிகரித்துள்ளது. இந்தியாவில் 2021-ஆம் ஆண்டில் 49.18 ரூபாயாக இருந்த ஒரு லிட்டர் பாலின் விலை தற்போது 58 ரூபாய்க்கு மேல் உள்ளது.

பிராந்திய கிராமப்புற வங்கி, கூட்டுறவு வங்கிகளுக்கான உயர்நிலை ஒழுங்குமுறை அமைப்பான தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, அதன் எகோ-போகஸ் இதழில் (மே 2023) 2021-22-ஆம் ஆண்டு 5.3 சதவீதமாக இருந்த பால் உற்பத்தி வளர்ச்சி 2022-23- ஆம் ஆண்டு 0.4 சதவீதமாக சரிவடைந்ததால் பால் விலையில் உயர்வு ஏற்பட்டுள்ளதாகக் கூறுகிறது.

2022-23-ஆம் ஆண்டு முதல் நம் நாட்டில் ஏற்பட்ட பால் விலை உயர்வு ஒட்டுமொத்த உணவு சந்தையில் பணவீக்கத்தை ஏற்படுத்தியது. 2022- ஆம் ஆண்டில் நாடு முழுவதும் 32 லட்சம் கால்நடைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்திய தோல் வீக்க நோய்த்தொற்று (இன்பெக்ஷியஸ் லம்பி ஸ்கின் டிசீஸ்) இரண்டு லட்சத்திற்கும் அதிகமான கால்நடைகளின் இறப்புக்குக் காரணமாக இருந்ததும், கரோனா பெருந்தொற்றுக்குப் பின்னர், பால் பொருட்களுக்கான தேவை அதிகரித்ததும் பால் மற்றும் பால் பொருட்களின் பற்றாக்குறைக்கான காரணங்கள் என இந்திய அரசின் கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை குறிப்பிட்டுள்ளது.

2020, 2022 ஆண்டுகளுக்கிடையில் அதிக பால் தரும் கறவை மாடுகள் மற்றும் எருமைகளின் எண்ணிக்கையில் ஏற்பட்ட தேக்கம் மூன்றாவது காரணம் என்கின்றனர் வல்லுநர்கள். கொள்ளை நோய்த்தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த விதிக்கப்பட்ட ஊரடங்குக் கட்டுப்பாடுகள் காரணமாக நாடு முழுவதும் கால்நடைகளுக்கான 1.684 கோடி செயற்கை கருவூட்டல்கள் நடைபெறவில்லை என்று இந்தியா முழுவதும் நடத்தப்பட்ட ஆய்வு கூறுகிறது.

செயற்கை கருவூட்டல் என்பது, எண்ணிக்கையில் குறைந்த கால்நடை இனங்களின் மரபணு முன்னேற்றத்தை விரைவுபடுத்த பயன்படுத்தப்படும் தொழில்நுட்பமாகும். இந்த செயற்கை கருவூட்டல் வழக்கத்திற்கு மேல் மிகக் குறைந்த வெப்பநிலை கொண்ட குளிரூட்டும் கருவி (கிரியோபிரெசர்வேஷன்) வசதி கொண்ட நம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள சுமார் 10,000 செயற்கை கருவூட்டல் மையங்களில் நடைபெறுகிறது.

ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவில், கறவை மாடுகளின் 80 சதவீத இனப்பெருக்கம் செயற்கை கருவூட்டல் மூலம் நடைபெறும் நிலையில், இந்தியாவில், 30 சதவீத இனப்பெருக்கம் மட்டுமே செயற்கை கருவூட்டல் வழி நடைபெறுகிறது.

செயற்கை கருவூட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அதிக பால் உற்பத்தித் திறன் கொண்ட கரண் சுவிஸ், கரண் ஃப்ரைஸ், ஃப்ரைஸ் வால், சுனந்தினி, பூலே-திரிவேணி, பிருந்தாவனி போன்ற பல கால்நடை கலப்பினங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

2020-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தில்லி தேசிய வேளாண் அறிவியல் கழகம் வெளியிட்ட 'செயற்கை கருவூட்டல் மூலம் கால்நடைகளை மேம்படுத்துதல்' என்ற அறிக்கையில் கால்நடை கலப்பினங்கள் இந்திய பால் தொழில் வளர்ச்சியைத் தூண்டியுள்ளன என்று கூறியுள்ளது.

'கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்வளப் புள்ளியியல்-2014' அறிக்கையின்படி 2010-11-இல் நாட்டில் 5 கோடி செயற்கை கால்நடை கருவூட்டல்கள் நடைபெற்றுள்ளன. அதற்கு அடுத்த 10 ஆண்டுகளில் வளர்ச்சியடைந்த இந்த செயற்கை கருவூட்டல் தொழில்நுட்பம் 2019-20 ஆம் ஆண்டில் 8 கோடிக்கும் அதிகமான கால்நடை கருவூட்டல்கள் நிகழ்வதற்கு அடிப்படையாக அமைந்தது.

பெருந்தொற்றுக்கு முந்தைய பத்தாண்டுகளில் செயற்கை கருவூட்டல் விகிதம் ஆண்டுக்கு சராசரியாக 5.4 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளது. இந்த விகிதத்தில் நமது நாட்டில் 2020-21-இல் 8.465 கோடி செயற்கை கருவூட்டல்களும் அதற்கு அடுத்த ஆண்டு 8.923 கோடி செயற்கை கருவூட்டல்களும் நிகழ்ந்திருக்கவேண்டும் என்று கணிக்கப்படுகிறது.

ஆனால் கடந்த ஜூன் 23 அன்று வெளியிடப்பட்ட 'அடிப்படை விலங்குகள் சார் வேளாண்மை புள்ளிவிவரங்கள் 2022' என்ற அறிக்கை, நாடு முழுவதும் இந்த இரண்டாண்டுகளில் 15.704 கோடி செயற்கை கருவூட்டல்கள் மட்டுமே நடந்ததாக கூறுகிறது. அதாவது 1.684 கோடி கால்நடை கருவூட்டல்கள் குறைந்துள்ளது.

இந்தியாவில் செயற்கை கருவூட்டலினால் நிகழும் சராசரி கருத்தரிப்பு விகிதம் 35 சதவீதம் என்ற தேசிய பால்வள மேம்பாட்டு வாரியத்தின் கூற்றுப்படி, குறைந்து போன 1.684 கோடி செயற்கை கருவூட்டல்களினால் 58.9 லட்சம் (1.684 கோடி பசுக்களில் 35%) கால்நடைகள் இந்தியாவில் உருவாக்கப்படவில்லை.

கருத்தரித்த பசு ஒரு பெண் கன்று ஈனுவதற்கான நிகழ்வு 50 சதவிகிதம் என்பதால் 29.47 லட்சம் அதிக பால் தரும் பசுக்களின் பிறப்பு குறைந்துள்ளது. இதனால் 2020 - 2022 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட இரண்டு ஆண்டுகளில் பால் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான வாய்ப்பை இந்தியா தவறவிட்டது என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

இழப்பு ஏற்பட்ட காலத்தில் மத்திய அரசு 'ராஷ்ட்ரிய கோகுல் மிஷன்' என்ற திட்டத்தின் வாயிலாக செயற்கை கால்நடை கருவூட்டலை தேசிய அளவில் செயல்படுத்தியது. தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அனைத்து இன மாடுகளின் மரபணு மேம்பாட்டை ஊக்குவித்து பால் உற்பத்தியை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கம்.

இத்திட்டத்தின் நான்காவது கட்டம் கடந்த மே மாதம் முடிவடைந்த நிலையில் இதுவரை இத்திட்டத்தின் கீழ் 6.767 கோடி செயற்கை கருவூட்டல்கள் நடத்தப்பட்டன. இத்திட்டம் செயல்படுத்தப்படாதிருந்தால் இந்தியாவில் செயற்கை கருவூட்டல்கள் பெருமளவு குறைந்திருக்கும்.

EVA STALIN IAS ACADEMY

# வேண்டும் நிரந்தரத் தீர்வு!

பாலஸ்தீன ஹமாஸ் ஆயுதக் குழுவுக்கும், இஸ்ரேல் ராணுவத்துக்கும் இடையே நவம்பர் 24-ஆம் தேதி நடைமுறைக்கு வந்த போர் நிறுத்தம் நேற்றுடன் முடிவுக்கு வந்த நிலையில் தற்போது மேலும் இரண்டு நாள் நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

அக்டோபர் 7-ஆம் தேதி இஸ்ரேலுக்குள் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் புகுந்து பொதுமக்கள் மீது நடத்திய தாக்குதலால் தொடங்கியது பிரச்னை. அதன் எதிர்வினையாக காஸா மீது வான்வழியாகவும், தரைவழியாகவும் இஸ்ரேல் ராணுவம் நடத்திவரும் தாக்குதலில் இதுவரை இருதரப்பிலும் சுமார் 17,400 உயிர்கள் பலியாகியுள்ளன. இஸ்ரேலுக்குள் புகுந்து ஹமாஸ் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் பயங்கரவாதத்தின் கொடூரத்தைக் கண்முன் கொண்டுவந்தன என்றால், காஸாவில் இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதல்கள் அதற்கு சற்றும் குறைவானதில்லை.

காஸாவில் தாக்குதலை நிறுத்தக் கோரி ஐ.நா. பொதுச் சபை, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டும் இஸ்ரேல் அதற்கு செவிசாய்க்காத நிலையில், கத்தார் நாட்டின் மத்தியஸ்த நடவடிக்கையின் பலனாக இஸ்ரேல் ராணுவத்துக்கும், ஹமாஸ் அமைப்புக்கும் இடையே இடைக்காலப் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. 150 பாலஸ்தீன கைதிகளை இஸ்ரேலும், 50 பிணைக் கைதிகளை ஹமாஸும் விடுவிக்க வேண்டும் என்பதுதான் ஒப்பந்தத்தின் முக்கிய அம்சம். போர் நிறுத்த இடைவெளியில் காஸா பகுதியில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டது.

போர் நிறுத்த காலத்தில் இதுவரை 180 பாலஸ்தீன சிறைக் கைதிகளை இஸ்ரேலும், 81 பிணைக் கைதிகளை ஹமாஸும் பல்வேறு கட்டங்களாக விடுவித்துள்ளன. இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள், குழந்தைகள் ஆவர். ஹமாஸ் அமைப்பினர் 200-க்கும் மேற்பட்ட பிணைக் கைதிகளை பிடித்துச் சென்றுள்ள நிலையில், கூடுதல் பிணைக் கைதிகளை விடுவிப்பதை அடிப்படையாகக் கொண்டு காஸாவில் தற்போதைய சண்டை நிறுத்தத்தை மேலும் நீட்டிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக கத்தார் வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

போர் நிறுத்தத்தை நீட்டிக்க இஸ்ரேல் விருப்பம் தெரிவித்தாலும், பிணைக் கைதிகள் விடுவிக்கும் பணி நிறைவடைந்ததும் ஹமாஸ் அமைப்பை பூண்டோடு அழிக்கும் வரை காஸாவில் தாக்குதல் நடவடிக்கை தொடரும் என இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சகம் அதிகாரபூர்வமாக அறிவித்திருக்கிறது. ஹமாஸ் போன்ற பயங்கரவாத அமைப்பு மீண்டும் உருவாகாமல் இருப்பதற்காக காஸாவின் பாதுகாப்பு இஸ்ரேல் ராணுவம் வசம் இருக்கும் என பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஏற்கெனவே சூசகமாகத் தெரிவித்திருக்கிறார். இவை ஹமாஸ் குழுவினருக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன.

சுமார் 23 லட்சம் மக்கள்தொகை கொண்ட காஸாவின் வடக்கு பகுதியிலிருந்து தெற்கு பகுதி நோக்கி 10 லட்சம் பாலஸ்தீனர்கள் போரின் ஆரம்ப கட்டத்தில் தஞ்சமடைந்தனர். இஸ்ரேல் கெடு விதித்த நிலையில், பெரும்பாலானவர்கள் தெற்கு பகுதிக்குச் சென்றுவிட்டனர். ஆனால், காஸாவின் தெற்கிலும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்ததால் ஒட்டுமொத்த காஸா மக்களின் நிலைமையும் பரிதவிப்புக்குள்ளானது.

பொதுமக்கள் உயிரிழப்பு ஒருபுறம் இருக்க, காஸாவின் ஒட்டுமொத்த கட்டமைப்பே இஸ்ரேலின் தாக்குதல்களில் அழிந்துவிட்டதாக வெளியாகும் தகவல்கள் கவலை அளிக்கின்றன. ஹமாஸ் ஆயுதக் குழுவை அழிக்கும் நோக்கில் ஒட்டுமொத்த பொதுசொத்துகளும் அழிக்கப்படுவது துயரம். இதன் நியாய, அநியாயங்கள் பற்றிய விவாதம் ஒருபக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், இப்போதைக்கு அப்பாவி மக்களின் உயிர் காக்கப்படுவதுதான் முக்கியம்.

பாலஸ்தீன பகுதியில் யூதர்களுக்காக 1948–இல் உருவானது இஸ்ரேல் நாடு. இதை ஏற்காத அரபு நாடுகள் இஸ்ரேல் மீது பல முறை படையெடுத்து தோல்வியை எதிர்கொண்டன. 1967–இல் நடைபெற்ற ஆறு நாள் போரில் வெற்றி பெற்று, பாலஸ்தீனத்தின் மேற்கு கரையையும், காஸாவையும் இஸ்ரேல் கைப்பற்றியது.

காஸாவிலிருந்து 2005–இல் இஸ்ரேல் ராணுவம் வெளியேறிவிட்டாலும் மேற்குக் கரை பகுதி இப்போதும் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ளது. இப்போது காஸாவையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்கான எண்ணத்தை இஸ்ரேல் வெளிப்படுத்தியுள்ளது.

காஸாவில் ஹமாஸ் ஆயுதக் குழுவினரை இஸ்ரேல் முற்றிலுமாக அழித்துவிடவில்லை. அங்கு இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதல் மேற்குக் கரையிலுள்ள பாலஸ்தீன மக்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஹமாஸ் ஆயுதக் குழுவின் செயல்பாடுகளுக்கு மேற்கு கரை ஆட்சிப் பொறுப்பில் உள்ள பாலஸ்தீன அரசு எதிர்ப்பு தெரிவித்துள்ள போதும், அங்கு இஸ்ரேல் பாதுகாப்புப் படையினருக்கு எதிரான பொதுமக்களின் போராட்டங்கள் அதிகரித்து வருகின்றன. இஸ்ரேல் பாதுகாப்புப் படையினரின் தாக்குதலில் மேற்குக் கரையில் 200–க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பது நிலைமையின் தீவிரத்தை அதிகரித்துள்ளது.

காஸாவில் ஏற்பட்டுள்ள மனிதாபிமான நெருக்கடிகள் முடிவுக்கு வர, போர் நிறுத்தம் நிரந்தரமாவது அவசியம். இஸ்ரேல், பாலஸ்தீனர்கள் இடையிலான பிரச்னைக்கு இரு நாடுகள் திட்டம் தான் தீர்வு என அமெரிக்கா, சீனா, இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட நாடுகள் ஏற்கெனவே தெரிவித்துள்ளன. பாலஸ்தீனர்களுக்கு என்று தனி நாட்டை உருவாக்குவதும், ஹமாஸ் போன்ற ஆயுதக் குழுக்கள் செயலிழப்பதும்தான் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வாக இருக்கும்.

EVA STALIN IAS ACADEMY

# 81 கோடி ஏழைகளுக்கு இலவச உணவு தானியங்கள் திட்டம் நீட்டிப்பு

**புது தில்லி, நவ.29:** சுமார் 81.35 கோடி ஏழைகள் பயன்பெறும் பிரதமரின் ஏழைகள் நல உணவுத் திட்டத்தை அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை புதன்கிழமை ஒப்புதல் அளித்தது.

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் புதன்கிழமை நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை மத்திய செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர் அனுராக் தாக்குர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

81.35 கோடி நபர்களுக்கு உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை பிரதமரின் ஏழைகள் உணவுத் திட்டம் உறுதி செய்கிறது.

உலகின் மிகப்பெரிய சமூக நலத் திட்டங்களில் ஒன்றாக இது உள்ளது. நிகழாண்டு டிசம்பர் 31-ஆம் தேதி முதல் முடிவடையும் இந்தத் திட்டத்தை அடுத்த ஆண்டு ஜனவரி முதல் 5 ஆண்டுகளுக்கு நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கு ரூ.11.80 லட்சம் கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது வரலாற்றுச் சிறப்பு மிக்க முடிவாகும்.

ஒரே நாடு ஒரே குடும்ப அட்டை திட்டத்தின் கீழ் பயனாளிகள் நாட்டில் உள்ள 5 லட்சத்துக்கும் அதிகமான நியாயவிலைக் கடைகளின் மூலம் அரிசி, கோதுமை, சிறுதானியங்கள் ஆகிய இலவச உணவு தானியங்களை தொடர்ந்து வாங்கலாம்.

## மத்திய அமைச்சரவை ஒப்புதல்



மத்திய அமைச்சரவை முடிவுகள் குறித்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த மத்திய அமைச்சர் அனுராக் தாக்குர்.

## உத்தரகண்ட் சுரங்க மீட்பு குறித்து ஆலோசனை

உத்தரகண்ட் சுரங்கத்தில் சிக்கிய 41 தொழிலாளர்கள் மீட்கப்பட்ட விவகாரம் குறித்து மத்திய அமைச்சரவை கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாகவும், மீட்பு நடவடிக்கைகளை பிரதமர் மோடி உணர்வுபூர்வமாக கேட்டறிந்ததாகவும் மத்திய அமைச்சர் அனுராக் தாக்குர் தெரிவித்தார்.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இந்தியர்கள் உயிர்களைப் பாதுகாக்க பிரதமர் மோடி தலைமையிலான அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதற்கு இது உதாரணம் என்றார் அவர்.

உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதோடு, ஏழைகள் மற்றும் பாதிக்கப்படும் பிரிவினரின் நிதி நெருக்கடியையும் குறைக்கும் என்றார்.

கரோனா பெருந்தொற்றின் 2020-இல் தொடங்கப்பட்ட பிரதமரின்இலவச உணவு தானியத் திட்டம் 2023 டிசம்பர் இறுதி வரை நீட்டிக்கப்பட்டது.

**விரைவு சிறப்பு நீதிமன்றங்கள் தொடர அனுமதி:** பாலியல் வழக்குகளில் விரைந்து நீதி வழங்க ஏதுவாக, விரைவு சிறப்பு நீதிமன்றங்கள் மேலும் 3 ஆண்டுகள் தொடர மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

01.04.2023-ம் ஆண்டு முதல் 31.03.2026 வரை ரூ.1952.23 கோடி (மத்திய அரசின் பங்காக ரூ.1207.24 கோடி மற்றும் மாநில அரசின் பங்காக ரூ.744.99 கோடி) மத்திய அரசின் நிதியுதவித் திட்டமாக விரைவு சிறப்பு நீதிமன்றங்கள் தொடர ஒப்புதல் அளிக்கப்பட்டது.

30 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் 761 விரைவு சிறப்பு நீதிமன்றங்கள் உள்ளன. இதில் 414 நீதிமன்றங்கள் போக்சோ வழக்குகளுக்கானவை. இவை 1,95,000 வழக்குகளுக்கு தீர்வு கண்டுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

**நிதிக் குழுவின் விதிகளுக்கு ஒப்புதல்:** பதினாறாவது நிதிக் குழுவின் விதிமுறைகளுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

மத்திய, மாநில அரசுகளுக்கு இடையே வரிகளின் நிகர வருவாயைப் பகிர்ந்தளிப்பது, அந்த வருவாயில் அந்தந்த மாநிலங்களுக்கு இடையே பங்கீடு செய்வது குறித்துப் பரிந்துரை செய்ய நிதிக் குழுவை அமைப்பதற்கான வழிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

இந்த நிதி ஆணையம் 2025 அக்டோபர் 31-ம் தேதிக்குள் அறிக்கையை தயார் செய்து குடியரசுத் தலைவரிடம் ஒப்படைக்கும் என்று அரசு தெரிவித்துள்ளது.

**பழங்குடியினருக்கான மேம்பாட்டுத் திட்டம்:** ரூ. 24,104 கோடி மதிப்பிலான பழங்குடியினருக்கான பிரதமரின் மேம்பாட்டுத் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

இதில், மத்திய அரசின் பங்காக ரூ.15,336 கோடியும், மாநில அரசின் பங்காக ரூ. 8,768 கோடியும் வழங்கப்பட உள்ளது.

அடர்ந்த வனப் பகுதிகளில் உள்ள பழங்குடியினருக்கு வீட்டு வசதி, சுத்தமான குடிநீர், சுகாதாரம், கல்வி, ஊட்டச்சத்து, சாலை மற்றும் தொலைத்தொடர்பு இணைப்பு போன்ற அடிப்படை வசதிகளை வழங்க இந்தத் திட்டம் வழிவகை செய்யும்.

## ரூ.1,261 கோடியில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ட்ரோன்கள்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அடுத்த ஆண்டு முதல் 26-ஆம் ஆண்டு வரை ரூ.1261 கோடியில் ட்ரோன்கள் வழங்கும் திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. சுமார் 15,000 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இந்த ட்ரோன்கள் வழங்கப்படும்.

அவர்களுக்கு 15 நாள் கட்டாய ட்ரோன் பைலட் பயிற்சி, மற்றும் வேளாண் துறை பயன்பாட்டுக்கான ட்ரோன் பயிற்சி ஆகியவை வழங்கப்படும்.

இத்திட்டம் விவசாயத்தில் மேம்பட்ட தொழில்நுட்பத்தை புகுத்தவும், மேம்பட்ட செயல்திறன், பயிர் மகசூலை அதிகரிக்கவும், விவசாயிகளின் நலனுக்காக செயல்பாட்டு செலவை குறைக்கவும் உதவும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

# உலகின் அமைதி, வளத்துக்கான கூட்டு நடவடிக்கை தொடரும்

## இந்தியாவின் ஜி20 தலைமை இன்றுடன் நிறைவு

ஜி-20 கூட்டமைப்பின் தலைமைத்துவத்தை இந்தியா ஏற்று வியாழக்கிழமையுடன் (நவ. 30) 365 நாள்கள், அதாவது ஓராண்டு நிறைவடைகிறது. 'ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்ற உணர்வை புத்துயிர் பெறச் செய்ய வேண்டிய தருணம் இதுவாகும்.

கடந்த ஆண்டு தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றபோது, உலக அளவில் பல்வேறு சவால்கள் தீவிரமாக நிலவின. கரோனா பாதிப்பில் இருந்து மீள வேண்டியது தொடர்பான கவலைகள், பருவநிலை மாற்ற அச்சுறுத்தல்கள், உலக அளவில் நிதி ஸ்திரமற்றநிலை, வளரும் நாடுகளில் கடன் நெருக்கடி போன்றவற்றின் தீவிரத் தன்மை அப்போது அதிகமாக இருந்தது.

இந்தச் சவாலான சூழலில் ஜி20 தலைமைப் பொறுப்பை ஏற்ற இந்தியா, மொத்த உள்நாட்டு உற்பத்தியை மையமாகக் கொண்ட வளர்ச்சி என்ற தன்மையில் இருந்து மக்களை மையமாகக் கொண்ட வளர்ச்சி என்ற தத்துவத்துக்கு மாறுவதற்கான ஒரு மாற்று உத்தியை வழங்க முயன்றுள்ளது. நம்மைப் பிரிக்கும் அம்சங்களைவிட, நம்மை இணைக்கும் அம்சங்களை உலகுக்கு நினைவூட்டுவதை நோக்கமாகக் கொண்டு இந்தியா செயல்பட்டு வருகிறது.

அனைவரையும் உள்ளடக்கிய தன்மை, லட்சியத்துடன் கூடிய செயல்பாடுகள், செயல் திட்டம் சார்ந்த நடவடிக்கைகள் மற்றும் தீர்க்கமான நடைமுறைகள் என இந்த நான்கு அம்சங்கள் இந்தியாவின் ஜி20 தலைமைத்துவ அணுகுமுறையை வரையறுக்கும் முக்கிய அம்சங்களாகத் திகழ்ந்தன. ஜி20 கூட்டமைப்பில் இடம்பெற்றுள்ள அனைத்து உறுப்பு நாடுகளாலும் ஜி20 தலைவர்களின் புது தில்லி தீர்மானம் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இது நமது அணுகுமுறைகள் மற்றும் கொள்கைகளை நிறைவேற்றுவதற்கான உறுதிப்பாட்டுக்குச் சான்றாக அமைந்துள்ளது.

அனைவரையும் உள்ளடக்கிய தன்மை என்பது இந்தியாவின் ஜி20 தலைமைத்துவத்தின் மையக் கருப்பொருளாக இருந்து வருகிறது. 55 ஆப்பிரிக்க நாடுகளின் ஒருங்கிணைந்த கூட்டமைப்பான ஆப்பிரிக்க ஒன்றியம், ஜி20 அமைப்பில் இணைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஜி20, உலகின் 80 சதவீத மக்கள்தொகையை உள்ளடக்கிய நாடுகளின் அமைப்பாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்தியாவின் இந்த ஆக்கபூர்வமான நிலைப்பாடு, உலகளாவிய சவால்களை எதிர்கொள்வது மற்றும் வாய்ப்புகளை அதிகரிப்பது குறித்த விரிவான கலந்துரையாடலை ஊக்குவித்துள்ளது.



பிரதமர் நரேந்திர மோடி

அனைவரையும் உள்ளடக்கிய தன்மை என்பது, ஜி20 தொடர்பான இந்தியாவின் உள்நாட்டு அணுகுமுறைகளிலும் எதிரொலித்தது. உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவுக்கு பொருத்தமான வகையில் மக்களின் தலைமைத்துவமாக அது அமைந்தது. மக்கள் பங்கேற்பு நடவடிக்கைகளின் மூலம் ஜி20 நிகழ்வுகள் நாட்டின் 140 கோடி மக்களையும் சென்றடைந்தன. அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலும் ஜி20 தொடர்பான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. ஜி20 தத்துவத்திற்கேற்ப முக்கியமான அம்சங்களில் விரிவான வளர்ச்சி இலக்குகளின் மீது சர்வதேச கவனம் அமைவதை இந்தியா உறுதி செய்தது.

ஜி20 பிரகடனத்தின் 'பசுமை மேம்பாட்டு ஒப்பந்தம்' பசியை எதிர்த்துப் போராடுவதிலும், பூமியைப் பாதுகாப்பதிலும் உள்ள சவால்களை எதிர்கொள்ள வழிகாட்டுகிறது. அது வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுச்சூழல் தன்மைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, சூழலுக்கேற்ற உற்பத்தி நடைமுறைகளை விரிவாக எடுத்துரைக்கிறது. 2030-ஆம் ஆண்டுக்குள் உலக அளவில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனை மும்மடங்கு அதிகரிக்க வேண்டும் என்று ஜி20 பிரகடனம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்தியா தலைமையில் நடைபெற்ற ஜி20 உச்சிமாநாட்டுப் பிரகடனத்தில் பாலின சமத்துவம் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. அடுத்த ஆண்டு, மகளிருக்கு அதிகாரமளித்தல் குறித்த ஒரு பிரத்யேக பணிக் குழுவை உருவாக்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில், நாடாளுமன்ற மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைகளில், மூன்றில் ஒரு பங்கு இடங்களை மகளிருக்கு ஒதுக்கும் மகளிர் இடஒதுக்கீட்டு மசோதா-2023 நிறைவேற்றப்பட்டிருப்பது மகளிர் தலைமையிலான வளர்ச்சிக்கான அரசின் உறுதிப்பாட்டைக் குறிக்கிறது.

இந்தியாவின் ஜி20 தலைமைத்துவத்தின்போது 87 முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், 118 ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. கடந்த கால எண்ணிக்கைகளைவிட இது அதிகம் என்பது பெருமைக்குரிய அம்சமாகும்.

ஜி20 தலைமைத்துவத்தின்போது, புவிசார் அரசியல் பிரச்னைகள், பொருளாதார மேம்பாடு மற்றும் வளர்ச்சி ஆகியவை குறித்த விவாதங்களை இந்தியா நடத்தியது. பயங்கரவாதமும், அப்பாவி பொதுமக்களின் உயிரிழப்பும் ஏற்றுக் கொள்ள முடியாதவையாகும். சமரசமற்ற கொள்கையுடன் பயங்கரவாதத்தை நாம் எதிர்கொள்ள வேண்டும் என்பதை இந்தியா வலியுறுத்தியது. பகைமையை வளர்ப்பதைத் தவிர்த்து மனிதாபிமானத்தை உள்வாங்கிச் செயல்பட வேண்டும் எனவும், இது போருக்கான காலம் அல்ல என்பதையும் இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

மக்களையும், பூமியையும் மையமாகக் கொண்ட, அமைதி மற்றும் வளத்திற்கான கூட்டு நடவடிக்கைகள் வரும் ஆண்டுகளிலும் தொடரும் என்ற நம்பிக்கையுடன் ஜி20 தலைமைத்துவத்தை பிரேஸிலிடம் இந்தியா ஒப்படைக்கிறது.